**செய்தி வெளியீடு எண்: 771** **நாள்: 26.10.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.10.2018) தலைமைச் செயலகத்தில், தில்லி தமிழ் கல்விக் கழகத்தின் சார்பில் தில்லியில் உள்ள மயூர் விகார் பள்ளி வளாகத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ''புரட்சித் தலைவி அம்மா'' பள்ளிக் கட்டட தொகுதிக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

தலைநகர் தில்லியில் கடந்த 90 ஆண்டுகளாக தில்லி தமிழ் கல்விக் கழகத்தால் ஏழு இடங்களில் மொழிவாரி சிறுபான்மையின மேல்நிலைப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில், முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தமிழ் மொழி கட்டாயப் பாடமாகவும், ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் விருப்பப் பாடமாகவும் பயிற்றுவிக்கப்படுகிறது. இப்பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்களில் 85 சதவிகிதம் தமிழர்கள் ஆவார்கள். இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலம் தமிழ்ப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கி வருகிறது.

தில்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 15 லட்சம் தமிழர்கள் வசிக்கிறார்கள். பெருகிவரும் தமிழ் மக்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு, தில்லி வளர்ச்சிக் குழுமத்தால், தில்லித் தமிழ்க் கல்வி கழகத்திற்கு மயூர் விகாரில் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு இரண்டரை ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மயூர் விகாரில் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு நிதிஉதவி வேண்டியும், அங்கு கட்டப்படும் பள்ளிக் கட்டடத்தின் ஒரு தொகுதிக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயர் சூட்டுவதற்கு விருப்பம் தெரிவித்தும், தில்லி தமிழ்க் கல்விக் கழகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள்.

தில்லி தமிழ்க் கல்விக் கழகத்தின் கோரிக்கையினை கனிவுடன் ஏற்று, தில்லித் தமிழ்க் கல்விக் கழகத்தின் சார்பில் தில்லியில் உள்ள மயூர் விகார் பள்ளி வளாகத்தில் 13.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பள்ளிக் கட்டடத்திற்கு நிதி உதவியாக தமிழ்நாடு அரசின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டார்கள்.

அதன்படி, தில்லித் தமிழ்க் கல்விக் கழகத்தின் சார்பில் தில்லியில் உள்ள மயூர் விகார் பள்ளி வளாகத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புரட்சித் தலைவி அம்மா பள்ளிக் கட்டட தொகுதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய பள்ளிக் கட்டடம் 6515 சதுர மீட்டர் பரப்பளவில், தரை மற்றும் நான்கு தளங்களுடன் அமையவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் முனைவர் மு. தம்பிதுரை, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு.என். தளவாய் சுந்தரம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா.வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் வி.சி. இராமேஸ்வரமுருகன், தில்லித் தமிழ் கல்விக் கழகத்தின் தலைவர் திரு.ம. சூரியநாராயணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 26.10.2018**